31 காலஞ Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு


" சங்கு கோண்டே வேற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கேல்லா மேடுத்தோதுவோமே "

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா $4\frac{1}{2}$ ரூபா

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலே, திருவல்லிக்கேணி, சென்னே. திங்கள் 10-4-33

திண றும்படி திணிக்குது!



ஏராளமான சிமிட்டிப் பீப்பாய்களையும், துணி முட்டைகளையும், பூட்ஸுகளையும் இந்தியாவில் ஜப்பான் திணித்துக் கோண்டிருக்கிறது. இந்தியக் கைத்தோழில்கள் இந்த அநியாயப் போட்டியைச் சமாளிக்க முடியாமல் திணறுகின்றன; சேத்துக் கோண்டிருக்கின்றன. இந்த சமயத்தில் இந்திய அரசாங்கம் என்ற படகோட்டி கும்பகர்ணன் போல் படுத்து உறங்கலாமா ? 'படகு முழுகி விடுமே' என்று இந்தியத் தோழிலாளி கதறுகின்றன். அரசாங்கம் விழித்தேழுமா ?

'ஹிந்து'வின் விஷமம்

பிரகாசிக்கும் திறமையைப் பற்றி சூரியனுக்கு எவரும் பாடம் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. அதே மாதிரி ராஜீய உலகின் சூரியனான காங்கிரஸ் மகா சபைக்கு ராஜீயத் திட்டத்தைப் பற்றி வேறு எவரும் கற்றுக் கொடுக்கத் தேவையில்லை.

மேலும் காங்கிரஸ் மகா சபையானது தியாகிகளின் திருக்கூட்டம். அந்தத் தியாகிகளின் அபிப்பிராயமே காங்கிரசின் அபிப்பிராயம். காங்கிரஸ் கொள்கையை மாற்றுவதற்கோ புதுத் திட்டங்களை அமைப்பதற்கோ காங்கிரசில் தியாகம் செய்தவர்களுக்குத்தான் உரிமையுண்டு. அவர்களுக்குத் திறமையும் உண்டு என்பதை சொல்லத் தேவையில்லை.

தற்காலத்தில் அரசாங்கத்துக்கும் காங்கிரசுக்கும் சமாதான மேற்பட வில்லையே யென்று போலிக் கண்ணீர் வடித்து, மனம் போனபடி சிலர் ஆலோசனை சொல்லப் புறப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கு ஒரு வார்த்தை! 'தொண்டனின் முதுகுத் தோல் உரிந்த அளவினின்று சட்ட சபைகளில் எத்தனை இடங்களைக் கைப் பற்றலாம்' என்று கணக்குப் போடுகின்றவர்களுக்கு காங்கிரஸ் திட்டத்தை மாற்றுவதற்கோ, ஆலோசனை கூறுவதற்கோ உரிமை கிடையாது என்றே உண்மையான காங்கிரஸ்காரர் எச்சரிக்கை செய்வார்கள். நிற்க,

காங்கிரஸ் தனது திட்டங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டதாகவும், வெள்ளைக் கடுதாசியின் பயனாக பிற்போக்காளர் சட்ட சபைகளைக் கைப்பற்றா வண்ணம் காங்கிரஸ் தடுக்க வேண்டு மென்றும், ஆகவே சட்ட மறுப்பைக் காங்கிரஸ் விட்டு விட வேண்டு மென்றும் சமீபத்தில் 'ஹிந்து' பத்திரிகை ஒர் அற்புத யோசனையைக் கூறியிருக்கிறது.

வெள்ளைக் கடுதாசி யல்ல, இதைப் போல ஆயிரம் கடுதாசி வந்தாலும் இனி இந்திய தேச பக்தர்களின் உறுதியை அசைத்து விட முடியாது. அந்நிய ஆட்சி முறை இந்த நாட்டிலுள்ள வரை ஏதேனும் ஒரு பிற்போக்கான சுயநல வர்க்கம் சர்க்காருக்கு வால் பிடித்துக் கொண்டு தானிருக்கும். இந்த கூட்டத்தை ஒரு பொருட்டாக எண்ணி போட்டியில் புகுவதற்கு வீர முடைய தேச பக்தர்கள் ஒரு போதும் எண்ண மாட்டார்கள்.

"இந்தப் பண நெருக்கடியான காலத்தில் சட்ட மறுப்பு இயக்கத்தால் எவ்வளவு பணமும் திறனும் விரயமாகிக் கஷ்டம் ஏற்பட்டு விட்டது" என்று 'ஹிந்து' நீலிக்கண்ணீர் வடிக்கின்றது. ஆனால் எந்தத் தேசமாவது தியாகம் செய்யாமலும் கஷ்டப்படாமலும் சுதந்திரமடைந்துளதா வென்று அறிவு மிகுந்த 'ஹிந்து' ஆசிரியரைக் கேட்க விரும்புகின்றோம்.

"இந்திய சுதந்திரத்துக்காக தேசீய ஒற்றுமை அவசியம். அத்தகைய ஒற்றுமையையடைவதற்காக காங்கிரஸ் சட்ட மறுப்பை நிறுத்தி விட வேண்டும்" என்று அதிகப் பிரசங்கியான 'ஹிந்து' பிதற்றி யிருக்கின்றது.

தேசத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தியது காங்கிரஸ்தான். இன்றைக்கும் தேச மக்களின் ஒற்றுமையைக் காப்பதும் காங்கிரஸ்காரர்கள் தான். ஆனால் சுயநலம் மிகுந்த பத்திரிகைகளும், பல்லைக் காட்டி நிற்கும் பான்மையுடைய சர்க்கார் தாஸர்களும் தான் தேசீய ஒற்றுமையைச் சிதைத்துக் கொண்டிருக்கின்றனரென்பதை 'ஹிந்து' அறிந்து கொள்ளவும்.

"காங்கிரஸ் காரர்களுக்குள்ளே பலர் தங்கள் திட்டத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று அபிப்பிராயப் படுகின்றார்கள்" என்று ஹிந்து ஆசிரியர் விஷமமாய்க் கூறியிருக்கின்றார். யார் அந்தப் 'பலர்'? அவர்களுக்குப் பேசவும் எழுதவும் தெரியாதா? ஸம்மனில்லாது ஆஜராவதற்கு ஹிந்து ஆசிரியர் தலை யெழுத்தா? நிற்க,

மகாத்மா காந்தியடிகள் சர்க்காருக்கு எழுதியிருப்பதாகக் கூறப்படும் கடித மொன்றை 'பம்பாய் கிரானிகள்' பத்திரிகை பிரசுரித்திருக்கிறது. சமாதானப் பேச்சுக்கு இடையூறாக காங்கிரஸின் வறட்டு ஜம்பம் குறுக்கே நிற்காது என்பதைக் காந்திஜி அதில் சொல்லியிருக்கிறார். வெள்ளைக் கடுதாசியின் பயனற்ற கூற்றையும் அக் கடிதத்தில் அவர் வெட்ட வெளிச்சமாக்கி யிருக்கிறார்.

காங்கிரஸ் திட்டத்தை மாற்றி யமைக்க, பழைய காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கோ, அல்லது அகில இந்திய காங்கிரசுக்கோ தான் அதிகார முண்டு. ஆனால் அந்தக் கமிட்டியின் முக்கியமானவர்களைச் சர்க்கார் சிறையி லிட்டிருக்கும் வரை, காங்கிரஸ் மகா சபை கூடுவதை கல்கத்தாவில் தடுத்ததுபோல் சர்க்கார் தடுக்கும் வரை காங்கிரஸ் கொள்கை மாறுவதற்கு வழியே கிடையாது.

'வின்னி'யின் ஆவேசம்!

'வின்னி' என்பது வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு செல்லப் பெயர். இந்தியாவுக்கு அவன் பரமத் துரோகியே யாயினும் பிடிவாதம், சுயமரியாதை முதலிய குணங்கள் அவனிடம் கொஞ்சம் கொஞ்சம் உண்டு. இந்தியாவின் புதிய அரசி யலைப்பற்றி ஆலோசிக்க கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி என்ற கூட்டத்தை கூட்டப் போகின் ருர்களல்லவா, அந்தக் கூட்டத்தோடு தன்னுல் ஒத்துழைக்க முடியாதென அவன் சொல்லி விட்டது ஒரு அழகு தான்.

"என்னுடைய கட்சிக்கு மேற்படி சபையில் பிரதிநிதித்துவம் போதாது. அதுவு மன்றி இந்த உதவாக்கரையான முயற்சியில் எங்கள் கோஷ்டிக்கு சம்பந்த மிருப்பானேன்?" என்று 'வின்னி' கூறி விட்டான். அவனைப் பின்பற்றி லார்ட் லாயிட், மிஸ்டர் பேஜ்கிராப்டு முதலியவர்கள் தங்களுக்கும் ஷை கூட்டுக் கமிட்டியில் இடம் வேண்டாமென மறுத்து விட்டனர். ஆனுல் அதே கூட்டுக் கமிட்டியில் சர்ச்சிலின் பரமானந்த சீடனை ஸர் ரெஜி னுல்டு கிராடாக் ஒரு ஸ்தானம் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. கூட்டுக் கமிட்டியின் பிடரி மயிர் இந்திய விரோதிகளின் கையில் த..ரிருக் கிறது. ஆயினும் 'சுயமரியாதை' மிகவுடைய சர்ச்சில் தனக்கு மட்டும் இடம் வேண்டா மெனக் கூறி விட்டான்.

மேற்படி கூட்டுக் கமிட்டிக்கு இந்தியாவி லிருந்து சில கம்பிளி மூட்டைகள் போகப் போகின்றனவாம். காங்கிரஸ்காரர்களை அடி யோடு மறந்து விட்டார்களாம். 22 பேர் இந்தியாவிலிருந்து போகப் போகின்ருர்களாம். இந்தப் பிரகஸ்பதிகளுக்கு மான வெட்கம் கொஞ்சமாவது இருக்குமானுல் ஷை கமிட்டி க்கு வரமாட்டோமென ஒரே முகமாக மறுக்க வேண்டும். ஷை கமிட்டியில் இந்திய ஆட் களுக்கு வோட்டு செய்யும் உரிமை கூட இல்லை யென்று விளக்கமாகத் தெரிவிக்கப் பட்டிருக் கிறது. ஒரு உரிமையு மில்லாமல் கப்பல் களுக்கு ஆசைப்பட்டு சீமை செல்வதை விட உண்மையான இந்தியன் தன்னுல் வரமுடியா தென மறுத்து விடுவதல்லவா சுயமரியாதை?

தனக்கு வந்தால் தெரியும்

இந்தியாவில் தற்போது நடந்து கொண்டி ருக்கும் ஆட்சி, உலகறிந்ததாகும். சரியான விசாரணை யின்றி—ஏன், விசாரணை என்பதே யில்லாமல்—ஏராளமான பேர் சிறைக்குள் தள் ளப்பட்டிருக்கிருர்கள். ஒரு பாவமும் அறியா மல், நிராயுதபாணியாக நின்று, சர்க்கார் சட் டத்தை மீறுவதாகச் சொல்லப்படும் கூட்டங் களுக்குத் தடியடி கிடைக்கிறது. துப்பாக்கிக் குண்டுகளுக்கும் சிலர் இரையாக் கப்படுகின் ருர்கள். சர்க்காருடைய இந்தக் காரியங்களுக் கெல்லாம் "சரியே, சரியே" என்று "ஜோ ஹுகும்" போட்டுக் கொண்டிருந்த ஸர் ஜான் சைமன், இப்பொழுது உறுமி யெழுந்திருக்கிருர்.

சைமன் உறுமல், இந்தியா சம்பந்தமாக வன்று. ருஷிய அரசாங்கத்தார் சிறைப்படுத் திய பிரிட்டிஷ் பிரஜைகள் சம்பந்தமாகத் தான். பெரிய பாட்டிகளைப் போல, "நானும் என்னு டைய வாழ்க்கையில் எத்தனையோ நூதனமான சட்டங்களைப் படித்திருக்கிறேன். இந்த மாதிரி சாட்சியங்களுக்கு மதிப்புக் கொடுப் போரை நான் எங்கும் கண்டதில்லை" என்று பிரலாபிக்கிருர். "சரியான விசாரணையின்றி, 35 பேரைக் கொன்று விட்டார்களே" என்று வாயைப் பிளக்கிருர். ருஷிய சர்க்கார் இவ்வா றெல்லாம் செய்திருந்தால், நாமும் அதை வெறுக்கத் தான் வேண்டும்.

ஆனுல், சைமன் துரையே! சென்ற வாரத் தில் கல்கத்தாவில் நடந்ததைக் கடாட்சித் தீரோ? இந்தியாவில் பல சிறைகளில் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் ஆயிரக் கணக்கான வர்களின் கதையை அறியீரோ? ஸி. ஐ. டி. ரகசியமாகக் கூறிய விஷயங்களைக் கொண்டே உள்ளே யடைக்கப்பட்டவர் எத்தனை பேர்! சாட்சியும் சம்மனுமின்றி, ஆளை அப்படியே தூக்கிச் செல்லக் கூடிய சட்டங்கள் தான் எத்தனை!

இதெல்லாம் மனிதருக்கு இயல்பு தான். 'தலை வலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தானே தெரியும்'! எனினும் அறிவுடையவன் அவை தனக்கு வரவே வராதென்று எண்ண மாட்டான். எல்லார் விஷயத்திலும் ஒரேவித நியாயத்துடன் தான் நடந்து கொள் ளுவான். ஆனுல், தனக்கு முள் தைத்து கொண்டிக் கொண்டிருக்கும் போது கூட, பிற மனிதனைக் குண்டூசியால் குத்திக் கொண் டிருப்பவனை என்னென்று சொல்லுவது?

கோலத்துக்குள் நுழைதல்

தடுக்கின் கீழ் நுழைவது தப்பித மென்றால் உடனே கோலத்துக்குள் நுழைவது பரம சாமர்த்திய மல்லவா? இப்போது ஜப்பான் வியாபாரிகள் இந்தியாவில் செய்யும் அட்டகாசம் அந்த தினுசாகத்தான் இருக்கின்றது.

செருப்பும், பூட்ஸும் ஏராளமாக இந்தியாவில் இறக்குமதியாகிற் தென்று, இந்தியாவின் தோல் தொழிற்சாலைக்காரர்கள் கூச்சல் போட்டார்கள். ஆகவே இறக்குமதியாகும் பூட்ஸுகளின் மீது சர்க்கார் வரியை உயர்த்தினார்கள். ஜப்பானா சும்மா யிருக்கும்? இப்போது துறைமுகச் சுங்கத்தை ஏமாற்றுவதற்கு ஜப்பான் ஒரு அபூர்வமான சூழ்ச்சி செய்திருக்கிறது. 'கான்வாஸ்' பூட்ஸாக அனுப்பிக் கொண்டிருந்ததை நிறுத்திவிட்டு பூட்ஸின் பாகங்களை—அதாவது பாதம், மேல் மூடி, என்று பிரித்துப் பிரித்து ஏராளமாக அனுப்பிக் கொண்டிருக்கிறது. இந்தியாவுக்குள் நுழைந்த பின்பு அப் பாகங்களை ஒன்று சேர்த்து பூட்ஸாக தயாரித்து விற்று விடுகின்றனர். இந்தியாவில் செருப்பு, பூட்ஸு தயாரித்துக் கொண்டிருக்கும் வர்த்தகர்களின் தொழிலில் மண் அடித்து விட்டது ஜப்பான். என்னே ஜப்பானின் வர்த்தக சூழ்ச்சி!

அடுத்தாற்போல ஜப்பானிலிருந்து ஏராளமான சிமிட்டி இப்போது இந்தியாவில் இறக்குமதியாகிக் கொண்டிருக்கிறது. 1932ஜூல் 13689 டன்கள் ஜப்பான் சிமிட்டி இந்தியாவில் நுழைந்தது. ஆனால் 1933ல் பத்தேமாத காலத்தில் 25,257 டன்களுக்குமேல் இந்தியாவில் நுழைந்திருக்கிறது. இதற்கு முன்னால் டன் $37\frac{1}{2}$ ரூபா யென்று விற்ற ஜப்பான் சிமிட்டி இப்போது டன் 30 ரூபாய் விதம் விற்கப்பட்டு வருகிறது. என்ன ஆச்சர்யம்! இத்தனைக்கும் டன்னுக்கு $18\frac{1}{4}$ ரூபாய் விதம் ஒட்டாவா வரியை ஜப்பான் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த வரி போக சிமிட்டின் விலை $12\frac{3}{4}$ ரூபாயாகும். சிமிட்டி போட்டுள்ள கோணிப்பை, ஜப்பானிலிருந்து இங்கு கொண்டு வர கப்பற் கூலி, இன்ஷியூரன்ஸ் சார்ஜு எல்லாவற்றையும் அந்த $12\frac{3}{4}$ ரூபாயில் கழித்தால் ஜப்பான் சிமிட்டின் அடக்க விலை, பூஜ்யம் ரூ—பூஜ்யம் அணா— பூஜ்யம் பைசாதான். ஆகவே இனாமாக ஜப்பான் சிமிட்டி அந்த நாட்டில் ஏற்றுமதி செய்யப்படுகிறதாகச் சொல்ல வேண்டும். ஜப்பான் கப்பல்களுக்குக் கூலி கிடைத்தால் போதுமென்றே இந்த வியாபாரத்தை நடத்துகின்றார்கள் போலும்! கோலத்துக்குள் நுழையும் சாமர்த்தியவான்கள் என்று தான் ஜப்பான் வியாபாரிகளைக் கூற வேண்டும்.

ஜோன்ஸின் பேச்சு

அரசர்களா? ஆடுகளா?

"சுதேச சமஸ்தான அதிபதிகள் தங்கள் பிரஜைகளின் சொத்துக்களையும் உரிமைகளையும் காக்கக் கடமைப் பட்டவர்கள். . இதை சுதேச மன்னர் வர்க்கம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் இந்த மன்னர்கள் என்ன செய்கின்றனர் தெரியுமா? தங்கள் பிரஜைகளின் முன்னே பிரமாதமாக ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்; ஆனால் அதே மன்னர்கள் வைஸ்ராயின் முன்னிலையிலும், பிரிட்டிஷ் ஏஜெண்டின் எதிரிலும்,கேவலம் ஆட்டுக் குட்டிகள் போல நடந்து கொள்கின்றனர்" என்று மிஸ்டர் மார்டி ஜோன்ஸ் டெல்லியில் ஓர் பிரசங்கத்தில் கூறினார். மிஸ்டர் மார்டி ஜோன்ஸ் இங்கிலாந்தில் பார்லிமெண்டு அங்கத்தினரா யிருந்தவர். இந்திய ராஜீய விஷயங்களை நன்கறிந்தவர். அதே கூட்டத்தில் அவர் இந்தியாவைப் பற்றிய இன்னும் சில கருத்துக்களையும் கூறினார்.

பிரிட்டிஷ் சூழ்ச்சி

"இந்தியாவைப் பிரிட்டிஷார் இறுக்கிப் பிடித்துக் கொள்வதற்காகவே 'ஐக்கிய அரசியல் திட்டம்' என்ற சாமர்த்தியமான வலையை வீசியிருக்கின்றனர்.

"ஆனால் இந்தியாவின் நன் மதிப்பைப் பெறாத வரையில் பிரிட்டிஷ் சாமான் இந்தியாவில் விற்பனை யாகுமா? பிரிட்டனுக்கு இந்தியா உதவி செய்ய விரும்புமா? இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் பரஸ்பர நல்லெண்ணமும் நம்பிக்கையும் ஏற்பட்டால்தான் நல்லது. இதை உணராது பிரிட்டிஷ் அரசாங்கம் நடந்து கொள்ளுமானால் கடைசியில் இந்த ஏகாதிபத்தியம் பொடிப் பொடியாகி விடும்.

பொம்மைக் கோலு

"இந்தியாவில் உள்ள அஸ்ஸெம்பிளியை நான் பார்த்தேன். அது வெறும் பொம்மைச் சபை என்பதே எனது அபிப்பிராயம். ஹிந்து, முஸ்லீம், சீக்கியன் என்ற பேதா பேத மின்றி, 'இந்தியன்' என்ற ஒரே உணர்ச்சியை ஒவ்வொரு இந்தியனும் பெறுவானாகில் ஸ்வராஜ்யம் அருகிலேயே இருக்கின்றது."

மாஜினியும் காந்திஜியும்

மாஜினி என்ற வீரன் இத்தாலியா நாட்டின் தவப் புதல்வன். ஐரோப்பா கண்டத்தில் தேசபக்தியையும் மத ஆவேசத்தையும் ஒன்ருகப் பிணித்து மனித சமூகத்தைக் கடைத்தேற்றப் பாடுபட்டவன் மாஜினி. அவனது அருமையான உபதேசங்கள் பல நமது காந்திஜியின் உபதேசங்களுக்கு சமானமாக இருக்கின்றன. 'அவனவன் கடமைகளைச் செய்து கொண்டிருந்தால் விடுதலை தானே வந்தெய்தும்' என்றே மாஜினி கூறிக்கொண் டிருந்தான். அதையே தான் மகாத்மாஜி இன்று சொல்லிக்கொண்டிருக்கிருர். 'மனித சமூகத்தின் நன்னடத்தையே மோக்ஷம்' என்பது மாஜினியின் கொள்கை. அதே கொள்கையை சபர்மதி முனிவரின் உபதேசங்களிலும் காண்கின்ருேம். மாஜினியின் அரும் பெரும் குணங்களைக் கண்டு அவனுக்கு ஐரோப்பா முழுதும் தலை வணங்கி நின்றது. காந்திஜியின் வாழ்க்கையைப் பற்றி இவ் விஷயத்தில் விவரிக்கத் தேவையில்லை. எளிமையை வலுவில் ஏற்றுத் தொண்டர்கள் பணி செய்ய வேண்டுமென்பது காந்தியடிகளின் ஆக்ஞை. அதே ஆக்ஞையை ஒரு காலத்தில் மாஜினி தனது தொண்டர்களுக்கு இட்டதுண்டு.

"மலைமீது ஏறுங்கள். ஏழைக் குடியானவன் அருகே உட்காருங்கள். கருமானின் உலைக்கூடத்திற்கும் செல்லுங்கள். தொழிலாளியை ஒருபோதும் புறக்கணிக்காதீர்கள். அவர்களிடம் அவர்களுக்கு என்னென்ன உரிமைகள் இருக்கவேண்டு மென்பதை எடுத்துக் கூறுங்கள். பண்டைக் காலத்தில் நமது நாடு இருந்த மேன்மையையும், அக் காலத்து வர்த்தகச் சிறப்பையும், அவை யெல்லாம் இன்று அழிந்து போயிருப்பதையும் எடுத்துச் சொல்லுங்கள். அந்த ஏழைகளுக்கு உண்மையை எடுத்துச் சொல்வாரில்லை. எத்தனை ஆயிரம் விதமான கொடுமைகள் அவர்களைச் சூழ்ந்திருக்கின்றன என்பதை சுட்டிக் காட்டுங்கள்" என்று மாஜினி தனது சீடர்களுக்குக் கூறினன். "இளைஞர்களே! கிராமத்துக்குத் திரும்புங்கள்" என்று காந்திஜி கதறுகின்ருரே, அதன் உண்மையை இன்னமும் நம்மவர் தெளிவாக அறியவில்லையன்ருே!

"வாழ்வு முழுவதும் உழைத்து உங்கள் உடலை ஆண்டவன் வாழத்தகுந்த ஆலயமாக ஆக்கிக்கொள்ளுங்கள்" என்று மாஜினி தனது நண்பனுக்கு ஒரு தடவை கடிதம் எழுதினன். இந்தக் கருத்தை காந்திஜி மட்டுமல்ல, இந்தியாவில் தோன்றிய எல்லா மகான்களும் இதை வற்புறுத்தி யிருக்கின்றனர்.

காந்திஜிக்கு உயிரே போன்றது அஹிம்சா தத்துவம். அந்தத் தத்துவத்தின் புனிதத்தை வெகுநாள் கழித்து மாஜினியும் உணர்ந்து கொண்டானென்பது அவனது சரித்திரத்தினின்று தெரிகிறது.

"பலாத்காரத்தினல் புதிய விஷயங்களை ஸ்தாபிக்க வேண்டுமென்பது எமது நோக்கமல்ல. பலாத்காரத்தினல் சிருஷ்டிக்கப்பட்ட எதுவும் உலகை நசுக்குவதாகவே கடைசியில் முடியும்" என்று எழுதிச் சென்ருன் மாஜினி.

தனது கொள்கைக்காக உயிரையும் தியாகம் செய்ய வேண்டுமென்பது காந்திஜியின் உபதேசம். அதையே மாஜினி இத்தாலிய நாட்டில் அக்காலத்தில் தனது சகோதர வீரர்களுக்கு உபதேசித்துக் கொண்டிருந்தான்.

"புனிதமான கொள்கைக்காகத் துயரங்களை சகிப்பதென்றும் தியாகம் செய்வதென்றும் முற்பட்டிருக்கின்றீர்கள். ஆகவே தோழர்களே! பின் வாங்காதீர்கள். திட நம்பிக்கையோடு தீரமாக முன்னேறுங்கள். பகவான் கிறிஸ்துவின் தியாகத்தை எந்த மனிதனும் பின்பற்றலாம். அதில் நம்பிக்கை கொண்டால் நமக்கு இறுதியில் வெற்றி கிட்டுவது நிச்சயம்." என்று மாஜினி கூறி யிருக்கிருன்.

மாஜினியின் உபதேசங்களும் காந்திஜியின் உபதேசங்களும் ஒரே விதமா யிருக்கின்றன. ராஜீயம், மதம், சமூகம், யாவும் ஒன்ருேடொன்று பின்னிக்கிடப்பன வென்றும், அவைகளை வேறு படுத்த முடியாதென்றும் மாஜினி உபதேசித்தான். காந்திஜியின் உபதேசங்களும் அவ்வாறுள. தான் உபதேசித்தவைகளை நடத்தையில் அநுஷ்டித்துக் கொண்டிருந்தவன் மாஜினி. மரணப் படுக்கையில் கிடந்தபோது மாஜினி தனது நாட்டுக்கு அனுப்பிய செய்தியில் வீர ஒளி ததும்புகின்றது.

"துரதிர்ஷ்டமான நமது நாட்டுக்காக அனைவரும் பாடுபடுங்கள். முன்னேற்றத்துக்காக நமது நாடு காத்துக் கொண்டிருக்கிறது. வழி தெரியாது அநேகர் நின்று கொண்டிருக்கிருர்கள். அவர்களுக்கெல்லாம் சரியான வழியைக் காட்டுங்கள். என் ஆத்மா அப்போது தான் சாந்தியடையும்."

வாழ்க மாஜினி நாமம்! வாழ்க காந்திமகான்!

தோத்தல் வாழ்வு ஒழிய—

சோனியாகவும் நோத்தலாகவும் பிறந்த குழந்தைகளைக் டைபர் நதியில் போட்டுக் கொன்று விடுவது ரோமாபுரி மக்களின் வழக்கமாக இருந்ததாம். அதே மாதிரி கிரேக்க நாட்டிலும் 'ஸ்பார்த்தர்' என்ற ஜாதியார் தேகபல மில்லாத குழந்தைகளை மலை யுச்சியில் கொண்டு போய் நிராதரவாக எறிந்து விட்டுத் திரும்பி விடுவார்களாம். கழுகுகளுக்கு இரையாக்கி விடுவார்களாம். இந்தக் கதைகளைக் கேட்கும் போது நாம் திடுக்கிடுகிறோம். இந்தியாவில் ராஜபுதனத்தில், வீர ஜாதி ஏற்பட்டிருந்ததற்குக் காரணம் தந்தைமார் தம் குழந்தைகளை பலவான்களாக வளர்த்து வந்ததே யாகும். தமிழ் நாட்டிலும் பெற்றோருக்கு வீர உணர்ச்சி அக் காலத்தில் மிகுந்திருந்ததால் தமிழ் ஜாதியே சிறப்புடையதா யிருந்து வந்தது. "தன் மண் காத்தன்று; பிறர் மண் கொண்டற்று என்னெனப்படுமோ நின் மகன் இறந்தது" என்று அக் காலத்தில் ஒரு தமிழ்த் தாய் இன்னொருத்தியைக் கேலி செய்தாளாம். எல்லாம் கதை! பண்டைக் காலத்துக் கவியில் தான் இத்தகைய வீரம் காணப்படுகிறது.

இன்றைக்கு தமிழ் இளைஞர்கள் கரப்பான் பூச்சிக்கு நடுங்கும் கூட்டமாக இருந்து வருகின்றனர். பயம்! பயம்! எதற்கும் பயம்! 'கோழைகள் ஆயிரம் தடவை செத்துப் போவார்கள்' என்ற ஷேக்ஸ்பியரின் வாக்கை தமிழ் நாட்டு இளைஞர்களே மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய கோழைத்தனத்துக்குக் காரணம் யார்? பத்து மாதம் சுமந்து பெறுகின்ற விந்தையான தாய்மார்களும், பதினைந்து வருஷம் வளர்த்து வரும் தந்தைமார்களும் தான் காரணம். இந்த அபூர்வமான தாய் தந்தைகள் பிள்ளை பெறுவதில் தான் குறைச்சலுண்டா? அதுவுமில்லை. டஜன் கணக்கில், பேபார்லாகப் பெற்று விட்டுக் கொண்டே யிருக்கின்றனர். ஏதோ ஓர் மிருகம் பல குட்டி போட்டதா லென்ன பயன் என்பார்கள்? அதைப் போல நடக்கவா தமிழன் தலையில் எழுதி யிருக்கிறது. தேசத்தின் கூட்டத்தை அதிகமாக்குவது ஆண்மைத் தனத்துக்கு அறிகுறி யன்று. வட துருவத்தைக் காண்பதற்கும், எவரெஸ்ட் ஏறுவதற்கும், தேச சேவை செய்வதற்கும் தைரியவான்களான சில குழந்தைகளைப் பெற்றாலும் அவர்கள் தான் தேசத்தின் ஆண்மைக்கு அறிகுறி யாவார்கள்.

"ஸலாம் ஆலேகும்"

ஜாலக் கண்ணாடி என்று ஒரு புத்தகம் உண்டு. அதில் "எத்தைச் சொன்னாலும் கேட்கும் நத்தைச் சூரி" என்று ஒரு மருந்தின் பிரதாபம் அடிக்கடி கூறப்படுகின்றது. நத்தைச் சூரி எத்தைச் சொன்னாலும் கேட்குமோ, கேட்காதோ, அது நமக்குத் தெரியாது. ஆனால், அமெரிக்கா எத்தைச் சொன்னாலும் கேட்கும் ஒரு "நத்தைச் சூரி"யாக பிரிட்டன் இன்று விளங்குகின்றது.

கடன்களையும், உலகப் பொருளாதாரத்தையும் பற்றி விவாதிக்க திரு. மாக்டனால்டையும், பிரான்ஸு, இத்தாலி, ஜெர்மனி ஆகியவற்றின் அரசாங்கங்களையும், அமெரிக்கப் பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் அழைத்திருக்கின்றாராம். திரு. மாக்டனால்டும் ஏப்ரல் 15உ புறப்படத் தயார் செய்து கொண்டிருக்கிறாராம்.

ஆனால், இந்த நான்கு அரசாங்கப் பிரதிநிதிகளும் சேர்ந்தாற் போலக் கூடி ஆலோசனை செய்து உலகக் கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்பது மட்டும் ரூஸ்வெல்டின் நோக்கமா? ஆனால் ரூஸ்வெல்டுக்கோ அது எக்கேடு கெட்டாலும், அமெரிக்கா கொடுத்துள்ள கடனைப் பற்றியே அதிக அக்கரை! உலகில் கடன் விஷயம் மிகத் தகராறாகவும், சிக்கலாகவும் போய்விட்டது. அது உலகின் பொருள் நிலைமையையும் பெரிதும் பாதித்திருக்கிறது. இவ்வாறாக எல்லாரும் சேர்ந்து கூடிப் பேசினால் தானே அவரவர் கஷ்ட நஷ்டங்களை வெளி விட்டுக் கூறிப் பரிகாரம் காண முடியும்? உலகப் பொருள் நிலைமையை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால், மிஸ்டர் ரூஸ்வெல்ட் இவ்விதம் தான் செய்யவேண்டும்.

அமெரிக்காவுக்கு தனது கடன்களைத் தண்டிக் கொள்ள வேண்டுமென்பதே நோக்கமென்றுதான் நினைக்க வேண்டி யிருக்கிறது. அதற்காகத்தான் தனித்தனி சம்பாஷணை! இந்த ஏற்பாட்டுக்கு ஐரோப்பிய நாடுகள் இணங்கலாமா? இணங்கித்தான் தீர வேண்டும். ஏனென்றால், முதலாளி, முதலாளி தானே! அமெரிக்கா கூப்பிடும் போதெல்லாம், இந்த நாடுகள் "சலாம் ஆலேகும்" போட்டு ஓட வேண்டியது தானே!

நமது குறிப்புகள்

சர்ச்சில் தாராளம்

"ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்திற்றாம்" என்று ஒரு பழமொழி யுண்டு. அந்தப் பிடாரியை விட, நமது சர்ச்சில் துரைமகனார் மிகவும் தாராள முடையவர். "ஆப்பிரிக்காக்காரன் தன்னுடைய சொந்த நாட்டில் இனிமேல் தங்கி யிருக்கலாம். இப்பொழுது இந்த உரிமையை அவனார்க்கு விட்டுக் கொடுக்கிறோம்." என்று அவர் ஒரு ஆப்பிரிக்கப் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். அஹா! என்ன தாராளம் பார்த்தீர்களா?

அவர் ஒப்புவாரா?

டில்லி யூனிவர்ஸிட்டியில் பட்டமளிப்பு விழாவில், ஸர் பஸ்லி ஹுஸ்ஸேன் பிரசங்கம் செய்கையில், "பொதுஜன நன்மையையே முதலாவதாகக் கருத வேண்டும். சொந்த நன்மையை அதற்கடுத்த படியாகவே கொள்ள வேண்டும்" என்று கூறினார். வாஸ்தவமே, நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம். "தேச நன்மையையே முதலாவதாக மதித்து, வகுப்பு நலத்தை அடுத்த படியாக வைத்துக்கொள்ள வேண்டும்" என்பதும் நமது கருத்து. இதை அவர் ஒப்புவாரா? 'சர்க்கார் உத்தியோகம்' என்ற எலும்புக்குக் காத்துக் கொண்டிருக்கும் பஸ்லி ஹுசேன் கோஷ்டியால் சுயநலத்தை எப்படி மறக்க முடியும்?

பூட்டுடைத்த போலீஸ்

காங்கிரஸ்காரர் மீது நாமக்கல் போலீசாருக்கு மிகவும் பிரியம் போலும்! ஏனெனில் 'சோதனை செய்கிறோம்' என்று கூறிக்கொண்டு ஒரு நாள் பொட்டிரெட்டிப்பட்டி என்ற கிராமத்தில் ராமஸ்வாமி அய்யர் என்பாரின் வீட்டுப் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்தார்களாம்! சோதித்தார்களாம்! அதே மாதிரி மாணிக்க வேலு முதலியார் என்பவரின் பள்ளிக்கூடத்திலும் நுழைந்து பெட்டிகளின் பூட்டுகளையும் உடைத்துச் சோதனை போட்டார்களாம்! காங்கிரஸ் துண்டுப் பிரசுரங்கள் கிடைக்கு மென்று போலீஸார் நினைத்து இந்தச் சோதனைகளை நடத்தினார்கள். இரண்டு இடத்திலும் சோதனையில் ஒன்றும் கிடைக்க வில்லையாம். போலீஸார் ஏதேனும் கிடைத்தாலும் கிடைக்கா விட்டாலும், பூட்டு ரிபேர் செய்பவனுக்கு கூலி கிடைக்குமாறு பேருபகாரம் செய்து விட்டுப் போனதற்காகவாவது அவர்களைக் குறிப்பிட வேண்டாமா?

மனித வேட்டை!

நாகரிகத்தில் தலை சிறந்ததெனப் பெருமை கொண்டாடிக் கொண்டிருக்கும், அமெரிக்காவில் நடக்கும் சில சங்கதிகள் மிக விநோதமானவை. சுதந்திர தெய்வம் அங்கே தாண்டவமாடுகிறாளாம்! அறிவுத் தெய்வம் அங்கு ஒளி வீசிக் கொண்டிருக்கிறாளாம்! கன்னி மேயோ போன்ற சில ஊர் சுற்றிகள், பிரிட்டனுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு, இந்தியாவில் வகுப்புப் பிளவு மிகக் கடுமையாயிருப்பதாகவும், ஜனங்கள் சண்டை போட்டு மண்டையை உடைத்துக் கொள்ளுகிறார்களென்றும், பிரிட்டன் இல்லாவிட்டால் இந்தியா குடி முழுகிப்போய் விடுமென்றும் வாய் கூசாது கூறுவார்கள்.

ஸ்காட்ஸ்பரோ என்ற இடத்தில் ஏதோ சில நீக்ரோ இளைஞர்மீது ஒரு வழக்கு. அந்த இளைஞரைத் தெருவில் பகிரங்கமாகச் சித்திரவதை புரிவதாக நாகரிக வெள்ளையர் பயமுறுத்துகிறார்களாம். நீகிரோவர் தரப்பில் ஆஜராகவிருக்கும் வக்கிலைக் கையைப் பிடித்துப் பலவந்தமாக அவர் தங்கி யிருக்கும் ஓட்டலிலிருந்து வெளியே யிழுத்துத் தள்ள முஸ்தீப்பு செய்து கொண்டிருக்கிறார்களாம். இந்த முரட்டு ஜனங்களிட மிருந்து எதிரிகளையும் வக்கிலையும் காப்பாற்றுவதற்காக, மெஷின் பீரங்கிகளும், ராணுவப் படைகளிரண்டும் வரவழைக்கப் பட்டனவாம்.

வழக்கு என்னவாகத்தா னிருக்கட்டுமே. இந்த மாதிரி ஆர்ப்பாட்டம் எங்கேயாவது உண்டா? வாலிபர்கள் குற்றம் செய்தார்களோ இல்லையோ என்பது விசாரணை முடிந்த பிறகே தெரிய வேண்டும். குற்றம் உண்மையில் செய்ததாகவே யிருக்கட்டும். அவர்கள் மீதுதான் வழக்கு நடைபெறுகிறதே, அது முடியு முன் ஏனிந்த ஆர்ப்பாட்டம்? இந்த மாதிரி சம்பவங்கள் அமெரிக்காவில் எத்தனையோ நடந்து விட்டன; இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன. என்றாலும், அமெரிக்காவே உலகில் நாகரிகத்தில் தலை சிறந்த தென்கிறார்கள்! ஏனென்றால், நாகரிக அமெரிக்காவிடம் பணம் ஏராளமாயிருக்கின்ற தல்லவா?

தேசீய வாரம்

பஜனையும், ஊர்வலமும் நடத்திக்கொண்டு பிரசாரம் செய்து வரும் 11 தொண்டர்களையும் மதுரைக் கடுத்த வேளாளப் பட்டியில் போலீசார் கைது செய்து மதுரைக்கு கொண்டு வந்திருக்கிறார்கள்.

கள்ளிக்கோட்டையில் ஊர்வலத்துக்கும், காங்கிரஸிற்கும் உதவி செய்ததற்காக ஸ்ரீயுத கிருஷ்ண நம்பீசன் என்பவருக்கு 9 மாதம் கடுங் காவல். வெவ்வேறு விலாசதாருக்கு 6 காங்கிரஸ் தபால் வைத்துக் கொண்டிருந்ததற்காக ராமன் வாரியர் என்பவருக்கு கிரிமினல் லா சட்டப்படி 4 மாதமும், தபால் இலாக்கா சட்டப்படி கடிதம் ஒன்றுக்கு 25 ரூ. வீதம் 150 ரூ. அபராதமும்.

தலைச்சேரியில், கண்ணனூர் உண்ணி என்பவருக்கு காங்கிரஸ் தபால் எழுதியதற்கும் பட்டுவாடா செய்ததற்காகவும் கைது செய்யப்பட்டு 6 வாரமும், 20 ரூ. அபராதமும்; பிரசங்கம் செய்தற்காக மணிகோத் குமாரருக்கு 6 வாரமும் 20 ரூ. அபராதமும்.

கிருஷ்ணக் குட்டி நாயரின் தலைமையில் 6 தொண்டர்கள் கால் நடையாக கிராமப் பிரசாரம் செய்து கொண்டும், ஊர்வலங்கள் நடத்திக் கொண்டும் செல்லுகின்றார்கள். பொதுக் கூட்டம் நடத்தியதற்கு இருவர் கைதி.

பூனாவில் எஸ். ஜி. ரானடே என்பவர் வைட்டா என்னும் ஊரை விட்டு வெளியே போகக் கூடாதென்ற உத்திரவை மீறியதற்காகக் கைது செய்யப்பட்டார்.

பம்பாயில் துண்டுப் பிரசுரம் வைத்திருந்த ஒருவர் கைதி. ஆமதாபாத்தில் கூர்ஜர சர்வாதிகாரிக்கு 6 மாதமும், 100 ரூபாயும்; மறியல் செய்த மூவருக்கு தலா 6 மாதம். ஷெ வழக்கில் ஜட்ஜு தீர்ப்புக் கூறும் போது மேஜையின் மேல் "24 மணி நேரத்திற்குள் இந்த ஜில்லாவை விட்டு நீர் வெளியே போய் விட வேண்டு" மென்று எழுதியிருந்த ஒரு கடிதத்தை வைத்ததற்காக ஒரு தொண்டர் கைது செய்யப்பட்டார்.

குண்டூரில் ஊர்வலம் நடத்தியபோது 4 ஸ்திரீகளும், இரண்டு தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர்.

வீடுகள் சோதனை

கல்கத்தாவில் சோதனை நடைபெற்று சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். மைமன்சிங்கில் பலருடைய வீடுகள் சோதனையிடப்பட்டு சில கடிதங்கள் மட்டும் கைப்பற்றப் பட்டன.

லக்ஷ்மணபுரியில் ஊர்வலம் நடத்தியதற்காகவும், துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காகவும் 6 பேர் கைதி.

காங்கிரஸ் மாஜி தலைவரான ஸ்ரீயுத ஆனே கல்கத்தா காங்கிரஸுக்குச் செல்லுகையில் கைது செய்யப்பட்டபோது சிறையில் குப்பிரண்டு வரும்போது உட்கார்ந்து எழுந்திருக்கும்படியும், சர்க்காருக்கு சலாம் போடும்படியும் பலாத்காரம் செய்யப்பட்டாராம்.

காந்தி குல்லாய் வழக்கு

ராஜமகேந்திரபுரத்தில் சூர்யநாராயண ராவ், தான் அணிந்திருந்த காந்தி குல்லாயை ஒரு போலீஸ் ஹெட் கான்ஸ்டபிள் பலவந்தமாக அப்புறப்படுத்தியதற்காக அவன் பேரில் வழக்குத் தொடுத்திருக்கிறாராம்.

கோவில் திறப்பு

திருவனந்தபுரம் மணக்காடு என்னுமிடத்தில் ஒரு கோவில் எல்லா ஜாதியினரும் வந்து தர்சிக்கும்படி திறந்து விடப்பட்டது. அந்தக் கோவில் பூஜை செய்பவர் ஒரு பிராம்மணன்.

ஆழ்வார்திருநகரியில் பல வருஷங்களாக நடந்துவரும் இலவச வாசகசாலையில் ஹரிஜனங்களும் வந்து வாசிக்கலாமென்று அதன் மானேஜரால் அறிவிக்கப் பட்டிருக்கிறதாம்.

ஹரிஜனங்களின் கல்வி அபிவிருத்திக்காக ஸ்ரீமதி ஜானகிபென் ஜெம்னலால் பஜாஜ் ரூ. 2500ம், ஸ்ரீமதி சுரத தேவி ராம் நாராயணர் ரூ. 2500ம் மகாத்மாவுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

கடவுள் அருகில் காந்தி

"மகாத்மா காந்தியும், மாளவியாவும் கடவுளை அணுகி இருப்பதால் தான் ஜனங்கள் அவர்களிடம் அன்பு செலுத்துகின்றனர். கடவுளிடம் அன்பு செலுத்துவதானல் அவர் சிருஷ்டித்துள்ள மக்களிடமும் அன்பு செலுத்த வேண்டும். யாரையும் ஏற்றத் தாழ்வாக நினைக்கக் கூடாது" என்று ஒரு சனாதன மகாநாட்டில் கோஸ்வாமி தத் என்பவர் பேசியிருக்கிறார்.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.